6 விலை சதம் 40.

# ஈழநாடு

The EELA NADU

ஊரி: 19 ஐப்பசி 10 ஜுல்ஹ: 12 இதழ் 256
யாழ்ப்பாணம் புதன்கிழமை 26-10-77

## ★ அரசு ஊழியர் இடமாற்றம்:

### பிரதமருடன் கூட்டணியினர் சந்திப்பு

கொழும்பு, செவ்வாய் கலவரங்களினுல் பாதிக்கப்பட்டு இன்றுவரை வேலைக்கு திரும்பாத அரச ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்க வேண்டுமென்று பிரதம மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவர் வற்புறுத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற இச்சந்திப்பின் போது தேசியப் பேரவை உறுப்பினர்களான வீ. என். நவரத்தினம், எம். சிவசிதம்பரம், இரா. சம்பந்தர், எஸ். கதிரவேலுப்பிள்ளை, எஸ். சிவசிதம்பரம். ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர்.

திஸமாராம அகதிகள் முகாமிற்கு காலம் தாழ்த்தி வந்த அகதிகளை அப்பகுதி அரசாங்க அதிபர் கலைப்பதாக திரு அ. அமிர்தலிங்கம் கூறிய குற்றச்சாட்டை பிரதமர் மறுத்தார்.

'நீங்கள் கூறும் குற்றச்சாட்டு குறித்து உடன் நடவடிக்கை எடுத்து அப்படியான சம்பவங்கள் இடம்பெறுமல் செய்யு படி அம்பாறை அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கிறேன்' என்று பிரதமர் தெரிவித்தார்.

இடமாற்றம் வழங்குவது குறித்து தாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

நோர்வே மக்கள் அன்பளிப்

(6 ம் பக்கம் பார்க்க)

## ★ வெளிநாட்டுக் காரில்வந்த இளைஞர்கள்---

# துப்பாக்கிமுனையில் கொள்ளை

# வங்கி மனேஜருக்கு சூடு!

## ஏழாலையில் துணிகரச் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

**புத்தம் புதிய வெளிநாட்டுக் காரில் வந்த 9 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் 4,000 ரூபாவை கொள்ளையடித்ததுடன் ஏழாலை கிராமிய வங்கியின் மனேஜரை சுட்டுப் படுகாயப் படுத்தியபின்னர் காரில் ஏறிச்சென்றுவிட்டனர்.**

**காயமடைந்த வங்கி மனேஜர் எஸ். டபிள்யூ. ஜெயரத்தினம் உடனடியாக, யாழ்ப்பாணம் பெரியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வங்கி மனேஜருக்கு காலில் காயம் ஏற்பட்டுள்ளது. காலிலிருந்து இன்னும் குண்டு எடுக்கப்படவில்லை.**

### புதிய காரில் வந்து...

நேற்றுக் காலை 10-45 மணியளவில் ஆங்கில இலக்கம் பொறிக்கப்பட்ட சிகப்புநிற புத்தம் புதிய காரில் வந்த இளைஞர் கோஷ்டியினர், இரண்டு பிரிவாக வந்து ஒரே சமயத்தில் ஏழாலை கிராமிய வங்கியையும், அருகிலுள்ள ப. நோ. கூ. சங்க புடவை நிலையத்தையும் முற்றுகையிட்டனரென்று இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

### ஒன்பது இளைஞர்கள்

ஒன்பது இளைஞர்களில் மூவர் லேஞ்சியால் முகத்தை மறைத்துக் கட்டியிருந்தனரென்றும், ஒருவர் துப்பாக்கியுடன் வெளியில் காவல் செய்தாரென்றும், மற்றொருவர் காரிலிருந்தபடியே கைக் கடிகாரத்தை பார்த்தபடி உத்தரவு வழங்கிக் கொண்டிருந்தாரென்றும் கூறப்படுகிறது.

### புடவைக் கடையில் கொள்ளை

புடவைக் கடைக்குள் சென்ற இளைஞர்கள் துப்பாக்கி முனையில் சுமார் 4,000 ரூபாவை கொள்ளையடித்தனர் என்று கூறப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வங்கி கொள்ளைகளைத் தொடர்ந்து மேலிடத்தின் உத்தரவின் பேரில் வங்கி வாசல் கதவை பூட்டிவிட்டு, உள்ளே வேலை நடப்பது வழக்கமாக இருந்து வந்தது.

### வங்கியில் நுழைந்து...

வங்கியை நோக்கிச் சென்ற மூன்று இளைஞர்கள் கதவைத் திறக்கும்படி கூறிய பின், துப்பாக்கியால் சுட்டு, பூட்டைத் திறந்து உள்ளே சென்றுர்கள் என்று இச்சம்பவம் பற்றிச் சொல்லப்படுகிறது.

உள்ளே சென்றவர்கள் இரும்புப் பெட்டியைத் திறக்குமாறு கூறியதாகவும் 'திறப்பு இல்லை' என்று வங்கி மனேஜர் கூறியதாகவும் மேலும் கூறப்படுகிறது.

### மனேஜருக்கு துப்பாக்கிச் சூடு

இதே நேரம் ஒருவர் சுடும்படி கூறியதும், வெளியில் நின்ற இளைஞர் சுட்டதாகவும் அச்சூடு மனேஜரின் காலில் பட்டதும் அவர் கீழே விழுந்ததாகவும் இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எச்சரிக்கை செய்தனராம்

சுட்ட பின்னர் இளைஞர்கள் வெளியில் வந்து ''கவனமாக இருங்கள், உங்கள் வாழ்க்கை சரி'' என்று எச்சரித்துவிட்டுச் சென்றதாகவும் மேலும் கூறப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் நடக்கும்போது பொதுமக்கள் சிலர் தூரத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்ததாகவும், அவர்களையும் இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டி எச்சரிக்கை செய்தனராம்!

### நவீன துப்பாக்கி?

இளைஞர்கள் கைத்துப்பாக்கியுடன், நவீனமான புதிய துப்பாக்கியையும் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது

கொள்ளையடித்த பின்னர்,

(6ம் பக்கம் பார்க்க)

## நேற்று நடைபெற்ற 6 அடையாள அணிவகுப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

அராலியில் துப்பாக்கிமுனையில் துப்பாக்கியைக் கொள்ளையடிக்க முயற்சித்தது, தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில், முதலாவது சந்தேகநபரான சுந்தரலிங்கம் நகுலேந்திரன் அடையாளம் காட்டப்பட்டார். இரண்டாவது சந்தேகநபரான நவாம தேவன் அடையாளம் காட்டப்படவில்லை. சந்தேகநபர்களல்லாத வேறு மூன்று பேரையும் அடையாளம் காட்டினர்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற மண்டபத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. எஸ். கனகரத்தினம் அடையாள அணிவகுப்பை நடத்தினுர்.

அராலியில் நாகலிங்கம் கணிதசிங்கத்திடம் துப்பாக்கி முனையில், துப்பாக்கியைக் கேட்டு, டோர்ச் லைட்டையும் 360 ரூபாவையும் கொள்ளையடித்தது தொடர்பாக இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

அராலியில் மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில், ஜீப்பில் சென்று கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில் சாட்சிகளான ப. குருசாமி, சிவசுப்பிரமணியம், விக்னேஸ்வரன் கனகசபை, சற்குணராசா, பரமானந்தராசா ஆகியோர்

(6-ம் பக்கம் பார்க்க)

### துப்பாக்கி முனையில்

# சட்டத்தரணியின் கார் கடத்தல்!

யாழ்ப்பாணம், புதன்

காரில் வந்த சட்டத்தரணியையும் அவரது மனைவியையும் 9 இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி, அவர்களை கயிற்றினுல் கட்டி பற்றைக்குள் தள்ளிவிட்டு, காரைகடத்திச் சென்ற சம்பவம் நேற்றுக் காலை வல்வெட்டித்துறையில் நிகழ்ந்துள்ளது.

கரவெட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி பாலசிங்கமும், அவரது மனைவியும், காங்கேசன்துறைக்கு காரில் சென்று கொண்டிருந்தபோதேஇச்சம்பவம் நடந்தது.

புத்தம் புதிய வெளிநாட்டு 504 சிவப்பு நிறக் காரில் வந்து கொண்டிருந்த போதே இவர்களை, 9 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் மறித்தார்களென்றும், பின்னர் பயமுறுத்தி அவர்களை காரை விட்டு இறக்கிய பின், கைகளையும் காலையும் கட்டி அருகிலிருந்த பற்றைக்குள் தள்ளினுர்களென்றும். இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

இதன்பின் அக்காரில் ஏறிக் கொண்ட இளைஞர்கள் காரை கடத்திச் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

கைகால் கட்டப்பட்ட நிலையில் பற்றைக்குள் கிடந்த சட்டத்தரணியையும் அவரது மனை

(6-ம் பக்கம் பார்க்க)

### ஐக்கிய அரபு அமைச்சர்

# சுட்டுக் கொலை

அபுதாபி, அக். 25

அபுதாபி விமானநிலையத்தில் இன்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் (யு. ஏ. ஈ.) வெளிவிவகார அமைச்சர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அபுதாபிக்கு விஜயஞ் செய்த சிரியா வெளிநாட்டு அமைச்சரை வழியனுப்பி வைப்பதற்காக விமான நிலையம் சென்றபோதே இத்துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

சிரியா வெளிநாட்டமைச்சரைச் சுட்டுக்கொல்லவே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும், எதிர்பாராதவிதமாக அபுதாபி அமைச்சர் பலியானுரென்றும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. சிரியா அமைச்சரைக் கொலைசெய்யக் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மூன்ருவது முயற்சி இது என்று செய்திகள் தெரிவித்தன. அபுதாபி அமைச்சரைக் கொலைசெய்தவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்பட்டனர்.

### வெள்ளத்திஞல்

## தமிழ் நாட்டில் ஒருலட்சம் மபர் வீடிழந்தனர்

சென்னை, அக். 25

தமிழ்நாட்டில் கடந்த ஒரு வார காலமாகத் தொடர்ந்து பெய்யும் பலத்த மழை, வெள்ளம் காரணமாக ஒரு லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர்.

சென்னை நகரில் அடையாறு ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினுல் 8 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வரட்சிப் பகுதியான இராமநாதபுரத்தில் எல்லா ஏரிகளும் நிரப்பிவிட்டன. மதுரையில் வைகை ஆறு பெருக்கெடுத்திருக்கிறது. தஞ்சாவூரில் 15 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர் நீரில் மூழ்கிவிட்டது. சென்னை நகரில் 11 பேர் பலியானுர்கள்.

## வரி விளம்பரம்

### தேவை

ரிங்கர், லேத்மன், வெல்டர் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும் ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 7444

எட்டியாந்தோட்டையில் உள்ள K. சிவகுருநாதன் அன் சன்ஸ் நிறுவனத்திற்கு புடவை, பலசரக்கு, இரும்பு வியாபாரக் கணக்கு தமிழில் எழுதுவதில் திறமையான அறிவுள்ள கணக்கு லிகிதர் தேவை. அனுபவத்தைப் பொறுத்து சம்பளம் நிர்ணயிக்கப்படும் 30-10-77-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். யாழ்நற்றன் ஸ்ரோர்ஸ், 82, முதலாம் குறுக்குத்தெரு, கொழும்பு 11. 7479

### வகுப்புகள்

யாழ்ப்பாண கல்வி நிலையத்தில் சிங்கள வகுப்புகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. 22, ராமைவாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7491

### விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் 2-ம் கட்டை குறுக்கு வீதியில் பருத்தித்துறை வீதியிலிருந்து 50 யாருக்குள் 5 3/4 பரப்பு காணி கல்வீடு, மா, பலா, தென்னை, நல்ல தண்ணீர் இணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: க மா. தப்பையா, கோப்பாய் வீதி உரும்பராய். 7482

## நெசவாளர் தேவை

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பன்னாலை, பளை, வீமன்காமம் ஆகிய இடங்களில் நடாத்தப்படும் கைத்தறி நிலையங்களுக்கு நெசவாளர் தேவை. கைத்தறி நெசவு வேலையில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவம், வயது, தராதரம் ஆகிய விபரங்களுடன் 77-11-03-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். தபாலுறையின் இடது பக்க மூலையில் "நெசவாளர் பதவி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
22 10-77 7488

## அறிவித்தல்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பழுதடைந்த ஒரு நூறு 45 கலன் வெற்றுத் தகரங்கள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூபா 50/- தலைமைக் காரியாலயத்தில் கட்டிக் கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திரம் 77-11-03-ந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்கத்தில் "வெற்றுத் தகர கேள்விப்பத்திரம்" எனக் குறிக்கப்படவேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை,
22-10-77. 7487

## சாட்சியம் அளிக்கலாம்

பண்டத்தரிப்பு, செவ். மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கடந்த 1972 ம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டகாலம் தொடக்கம் புதிய அரசு பதவி ஏற்ற காலம் வரை நடைபெற்ற நிர்வாக முறைபற்றி விசாரணை நடைபெற்று வருகின்றது. கூட்டுறவுப் பரிசோதகர் திரு. ஏ. யோசவ் தலைமையில் நடைபெற்றுவரும் இவ் விசாரணையில் சங்கத்தில் ஊழல்கள், மோசடிகள் ஏதாவது நடைபெற்றிருப்பின் அதுபற்றி சங்க உறுப்பினர்கள், ஊழியர்கள், முன்னாள் இயக்குநர் சபை உறுப்பினர்கள் ஆகியோர் முறைப்பாடு தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது. (அ)

## பிராமண இளைஞர் சமாஜம்

மாவிட்டபுரம், சேவ்வாய் பிராமண இளைஞர் சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர்: சிவஸ்ரீ வை. சோமாஸ்கந்தக்குருக்கள், செயலாளர்: சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக்குருக்கள், பொருளாளர்: பிரமஸ்ரீ சே. சிவபாலசர்மா, போஷகர்: சிவஸ்ரீ நா சோமாஸ்கந்தக்குருக்கள்.

18 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது.

## சிலோன் சின்தெட்டிக் டெக்ஸ்ரைல் மில்ஸ் லிமிட்டெட்
CEYLON SYNTHETIC TEXTILE MILLS LTD

ஸ்தாபனத்தாரின் தயாரிப்புக்களான

- நைலோன் மொஸ் கிறேப் (Nylon Moss Crape)
- டிரெஸ் பப்றிக் (Dress Fabric)
- பட்டர் நைலோன் (Butter Nylon)
- ஸ்பன் சூற்றிங் (Spun Suiting)

27-10-77 முதல் விற்பனைக்குண்டு

**லிங்கம் சில்க் ஹவுஸ்**
18, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7684. 7504

## இலங்கை ஆசிரியர் சங்கம்
### யாழ். மாவட்டக்கிளை (வ. மா. ஆ. ச.)
ப. இ. 984

இடமாற்றத்துக்கு விண்ணப்பித்த பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வந்துள்ள அமைச்சு அதிகாரிகள் குழுவை 25-10-77-ல் சந்திக்காதவர்கள் 26-10-77 புதன் காலை யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்துக்கு வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

த. தேவராசா,
54, ஜும்மா பள்ளிவாசல்ஒழுங்கை, பொதுச்செயலாளர்.
யாழ்ப்பாணம். 7505

## கோட்டு விற்பனவு

திருகோணமலை மாவட்ட நீதிமன்றம்
இராமலிங்கம் இரத்தினம்,
23, சிவன்வீதி, திருகோணமலை.
வழக்காளி

இல: 9380

எதிராக
இராமலிங்கம் சச்சிதானந்தம்,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

திருகோணமலை மாவட்டநீதிமன்ற இல. 9380-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த வெளியாத்துக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனங்களை 1977-ம் வருடம் நவம்பர் மாதம் 18-ந் திகதி (18-11-77) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் முறையே அக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

7500/- ரூபாவுக்கு 72 2-20 ந் திகதி தொடக்கம் 72-7-27-ந் திகதி வரையும் வருடமொன்றிற்கு 10 வீத வட்டி கூட்டி ரூபா 11000/-மும் இதற்கு 1972 7-28 ந் திகதிக்குப் பின்னர் முழுத்தொகையும் அறவிடும் வரையும் சட்டபூர்வமான வட்டியும், நீதிமன்றச்செலவும் பிற நாளுவிதச் செலவும்.

### ஆதன அட்டவணை

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று, அல்வாய் மணி வீரவாகு தேவன்குறிச்சியிலுறையில் இருக்கும் "கட்டுப்பிலிக்கடி" என்னும் காணி நிலப்பரப்பு 7 குளி 18/32 இதற்கு எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு மு. கடைபிப்பிள்ளை செல்லையாவுக்குரிய ஆதனம், மேற்கு முருகுப் பிள்ளை சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு இராமலிங்கம் துரைராசாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட யாவிலும் சொரியலாய் அரைவாசி. மேற்கூறிய காணி 1938-4-22-ந் திகதி பருத்தித்துறை நீதிமன்றத்தில் 2908 என்னும் இலக்க பிரிவிடல் வழக்கின்படியும் நொத்தாரிஸ் க. கிருஷ்ணபிள்ளை முகதாவில் 1951-2-2-ந் திகதி 12940 ம் இலக்கத்தில் முடிந்த நன்கொடையும் ஆட்சியும் ஆன எதிராளியின் காணி.

2. மணிவீரவாகுதேவன் குறிச்சியிறை வறணைகளை நி. ப. 26 3/8 தோட்டம் 4. மேற்குப் புறமாக ஆட்சிப்படி 1/3 பங்குக்கு நி ப. 10குளி 10 குளி10 7/12. கிழக்குவெள்ளவாய்க்கால், வடக்கு ரோட்டு, மேற்கு சின்னத்தம்பி கந்தையாவுக்கும் மறுபேருக்கும், தெற்கு தெரு இவற்றில் சொரியலாய் 7/24 பங்கில் அரைவாசி பெறுமதி ரூபா 750/-.

3. மழவராயன் குறிச்சியிறை சாளம்பை நாவலடி நி. ப. 161 தோட்டம் 4 இப்பிரிவுகளில் மேற்குப்புறமாக 11/12 பங்கில் நடுப்பெற 1/3இல் 1/6 பங்குக்கு ஆட்சிப்படி நி ப. 8 குளி 8 17/36 கிணறு பனைகளும், கிழக்கு வேலுப்பிள்ளை மகள் அன்னப்பிள்ளைக்கும், வடக்கு ரோட்டு, மேற்கு நடராசா பெண் மயிலாத்தைப்பிள்ளைக்கும், தெற்கு தெரு. இவ்வெல்லைக்குட்பட்டவையில் சொரியலாய் 3/4இல் அரைவாசி. பெறுமதி: 1000/-.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
பிசுக்கால்/பதிவாளர்.

யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றம்,
1977-10-24. 7198

## மாநகராட்சி மன்றம்

சந்தை, காலை, சபைக்குரிய காணியிலுள்ள கடைகள்,
துவிச்சக்கரவண்டி பாதுகாக்குமிடம் ஆகியவற்றுக்கான
குத்தகை — 1978

# கேள்வி அறிவித்தல்

1-1-1978-ந் திகதி தொடக்கம் 31-12-1978-ந் திகதி வரையிலான காலத்திற்கு மேல் குறிப்பிட்டவற்றிற்கான குத்தகைக் கேள்விகள் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 8-11-77-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விகள் இரண்டுப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது மாநகராட்சி மன்ற ஆணையாளர் அலுவலகத்திலிருக்கும் "கேள்விப்பத்திரப் பெட்டி"யினுள் சேர்க்கப்படல் வேண்டும். எந்தக் குத்தகைக்கு கேள்வி சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்தக் குத்தகையின் பெயரை கேள்விப்பத்திர உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

2. கீழே விபரிக்கப்பட்ட அட்டவணைப்படி 7-11-77 ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் அதற்குரிய கீழ்க்கண்ட பணத்தை செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்வித்தொகைகள் இவ்வருடத்தின் (1977ன்) ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைக்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்.

| குத்தகை விபரம் | 1977ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்விப் பிணைக் கட்டணம் | நொத்தாரிஸ் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச்சந்தை | 63,000-00 | 10-00 | 250-00 | 750-00 |
| 2. முற்றவெளிச் சந்தை | 32,400-00 | 10 00 | 250-00 | 750-00 |
| 3. செங்குந்தா சந்தை | 43,300-00 | 10-00 | 250-00 | 750-00 |
| 4. சின்னக்கடை சந்தை | 28,810-00 | 10-00 | 250-00 | 750-00 |
| 5. அரியாலை (புதிய) சந்தை | 3,265-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 6. கொழும்புத்துறை சந்தை | 755 00 | 10-00 | 50-00 | 50-00 |
| 7. நாவாந்துறை சந்தை | 7,811-25 | 10-00 | 50-00 | 50-00 |
| 8. பாசையூர் சந்தை | 6,400-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 9. பண்ணை மீன் சந்தை | 9,555-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 10. நாச்சிமார் கோவில் சந்தை | 205-00 | 5-00 | 25-00 | 25-00 |
| 11. பெரியகடைக் காலை | —— | 10-00 | 100-00 | 100-00 |
| 12. செங்குந்தா சந்தை வளவிலான துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம் | 860-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 13. பண்ணை மீன் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 555-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 14. சின்னக்கடை சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 1,200-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 15. நவீன சந்தை வளவிலான துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 6,203-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 16. பொதுசன நூல்நிலைய துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 2,107-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 17. பண்ணை சந்தையிலுள்ள கடை அறை | 528-88 | 10-00 | 50-00 | 50-00 |
| 18. பாசையூர் சந்தையிலுள்ள 1-ம் இல கடை | 340-00 | 10-00 | 50-00 | 50-00 |
| 19. பாசையூர் சந்தையிலுள்ள 3-ம் இல. கடை | 60-00 | 10-00 | 50-00 | 50-00 |

இதுவிடயமான இதர விடயங்களைப் பெற விரும்புவோர் அவற்றை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சி மன்றம்

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
24-10-77. 7503

# ஏவுகணைகளை இந்தியா உற்பத்தி செய்யும்

## ஜெகஜீவன்ராம் தகவல்

**புதுடில்லி, அக். 25**

**இந்தியா தனது பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொருட்டு ஏவுகணைகளை உற்பத்தி செய்ய உள்ளது.**

இத்தகவலை இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஜெயஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் ஏற்படும் நேரத்தில் அவசியம் ஏற்படும் பட்சத்தில் ஏவுகணைகளைப் பயன்படுத்த இந்தியா தவறமாட்டாது என்றும் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

ஏவுகணை வடிவமைப்பு, உற்பத்தி ஆகிய துறைகளில் இந்தியா ஓரளவு திறமை அடைந்துள்ளது என்றும் திரு. ஜெகஜீவன் கூறினார். (இ)

**இத்தாலியில் உள்ள**

## மேற்குஜெர்மன் தூதருக்கு கொலைப்பயமுறுத்தல்

ரோம், அக். 25

இத்தாலியில் உள்ள மேற்கு ஜெர்மன் தூதுவருக்கு தொலைபேசிமூலம் கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஜெர்மனியில் சிறை வைக்கப்பட்டுள்ள கொரில்லாக்களை 48 மணித்தியாலங்களில் விடுதலை செய்யாவிடின் தூதுவர் கொலைசெய்யப்படுவார் என்று தொலைபேசி பயமுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது என்று ரோம் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மேற்கு ஜெர்மன் விமானத்தைக் கடத்தி, கடத்தல் முறியடிக்கப்பட்டபோது கொலைசெய்யப்பட்ட கொரில்லாக்களின் சகாக்களே இப்பயமுறுத்தலை விடுத்துள்ளனர்.

மேற்கு ஜெர்மன் தூதுவருக்கு இப்பயமுறுத்தல் செய்தியைத் தெரிவிக்குமாறு இத்தாலிய நிருபர் ஒருவருக்கே இத்தொலைபேசி அழைப்பு விடுக்கப்பட்டதாம்.

ஆனால் ரோமில் உள்ள மேற்கு ஜெர்மன் தூதரகம் இக் கொலைப் பயமுறுத்தல் பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாமல் வழமைபோல் இயங்கி வருவதாகவும் தூதுவர் வழமைபோல் கடமையாற்றி வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## "மயானத்தின் குறை நீங்குமா?"

சுழிபுரம், செவ்வாய்

திருவடிநிலைக்கு அருகில் உள்ள மயானம் சீரற்ற நிலையில் உள்ளது.

சுழிபுரம் திருவடிநிலைக்கு அருகாமையிலுள்ள மயானத்தில் சுழிபுரம், பண்ணாகம் கிராமத்தில் வாழும் மக்கள் இறந்தவர்கள் உடலைத் தகனம் செய்து வருகின்றனர். மழை, வெயில் காலங்களில் தங்கி இருப்பதற்கு ஓர் மண்டபம் இல்லாமல் இருப்பது பெரும் குறையாகவுள்ளது, ஒரு பழுதடைந்த கட்டிடம் அருகாமையில் இருக்கின்றது. சமீபத்தில் ஒரு நாள் மழைஅதிகமாகப் பெய்துகொண்டிருந்த நேரத்தில் பிரேதம் ஒன்றைக் கொண்டு சென்றவர்கள் பெரும் அவஸ்தைக்குள்ளாகியுள்ளனர். சிலர் அருகேயிருந்த கட்டிடத்துக்குள் சென்றபோது கூரையில் இருந்த ஓடுகள், மரங்கள் அவர்கள் தலையில் விழுந்தன. யாரும் காயமின்றித் தெய்வாதீனமாக தப்பிக்கொண்டனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் இது விடயத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என வினவப் படுகிறது. (உ)

## 'பிள்ளைகளின் உயர்வும் தாழ்வும் அன்னையர் கரங்களில்'

வேலணை, செவ்.

"சிறுபிள்ளைகளின் உயர்வும் தாழ்வும் பொதுவாக தாய்மார்களிடமே இருக்கின்றது. எவ்வளவு ஏழையாக இருந்தாலும் படிக்கவைக்கவேண்டும்" என்று வடபகுதி சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு கூறினார்.

வேலணை கிழக்கு நேதாஜி சன சமூக நிலையத்தின் பெரும் முயற்சியினால் சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் தொண்டன்பின்னையான் சிறுவர் பாடசாலையையும் மாதர் அபிவிருத்தி முன்னேற்றச் சங்கத்தையும் திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 'தாய்மார்களே பிள்ளைகளுக்கு நற்பழக்க வழக்கங்களை பழக்கிவைக்க முன்வருவதுடன் இந்த நாட்டைஉயர்த்தி அபிவிருத்தி அடையச் செய்யவும் முன்வர வேண்டும். அத்துடன் இந்த நாட்டில்செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகளை சிரமதான மூலமும் செய்ய முற்பட வேண்டும். குளம் தோண்டுதல் நன்னீர் சேகரித்தல், வீதிகள் அமைத்தல் போன்ற பொதுத் தொண்டுகளில் தாய்மார்களும் உற்சாகத்துடன் ஈடுபடவேண்டும்' என்றார். [உ]

## காவலூர் அபிவிருத்தி அலுவலக மின்விசிறி திருட்டு

வேலணை, செவ்வாய்

ஊர்காவற்றுறைத் தொகுதி பிரதேச அபிவிருத்திச் சபைக் காரியாலயத்தில் இருந்த 1500 ரூபா பெறுமதி மிக்க மின்சார விசிறி இரவுவேளையில் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் இங்கு ஏற்பட்ட சூறாவளியால் இக்காரியாலயமும் பாதிக்கப்பட்டிருந்தது. ஊர்காவற்றுறைப் பொலிசார் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## வலி.மேற்கில் பெருமழை

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம், பொன்னாலை ஆகிய இடங்களிலுள்ள நெல்வயல்கள் பூராவும் வெள்ளமயமாகவே காட்சியளிக்கின்றன, தொடர்ந்து பெய்யும் மழையினால் பயிர்கள் யாவும் பலத்த சேதத்திற்குள்ளாகும் நிலையிலுள்ளன,

பள்ளமாகவுள்ள வயல்களிலுள்ள நெற்பயிர்கள்வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. வயல் சொந்தக்காரர்கள் வெள்ளத்தை போக்குவதிலும், வரம்புகளை உடைத்து விடுவதிலும் கவனம்செலுத்திவருகின்றனர்

## கடத்தப்பட்ட இடத்திலேயே கார் விடப்பட்டிருந்தது

### யாழ். நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நகரமத்தியில், டாக்ஸியொன்று இளைஞர்களால் கடத்தப்பட்டு, பல மைல்கள் ஓடியபின்னர், கடத்தப்பட்ட இடத்திலேயே மீண்டும் விடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினமிரவு நடந்துள்ளது.

கட்டப்பராயில் ஒரு மரணவீட்டிற்குச் செல்லவேண்டும் எனக்கூறி இரு இளைஞர்கள் யாழ்.வின்சர் தியேட்டருக்கு அருகில், டாக்ஸி ஒன்றைப் பிடித்தார்களென்று இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இந்த டாக்ஸியில், ராஜவீதியில் மேலும் இரு இளைஞர்கள் ஏறிக்கொண்டு துப்பாக்கி முனையில், சாரதியைப் பின் சீட்டில் இடத்தி அமர்த்திப் பிடித்துக்கொண்டு, இளைஞர் ஒருவர் டாக்ஸியை ஓட்டிச் சென்றாரென்றும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

பலமைல்கள் ஓடியபின்னர், டாக்ஸியைக் கடத்திய இடத்தில் நிறுத்திவிட்டு, இளைஞர்கள் ஓடித்தப்பிவிட்டார்களென்றும் இச்சம்பவம்பற்றி மேலும் கூறப்படுகிறது.

டாக்ஸிசாரதி,யாழ்ப்பாணம் பொலிஸில் புகார்செய்ததைத் தொடர்ந்து, பொலிஸார் இச்சம்பவம்பற்றி விசாரணை செய்துவருகிறார்கள். (அ)

## மொரார்ஜி-பிரஷ்னேவ் பேச்சுவார்த்தை

மாஸ்கோ, அக். 25

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இன்று ரஷ்ய ஜனாதிபதி திரு. பிரஷ்னேவுடன் இரண்டாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

கடந்த வெள்ளியன்று ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு மாஸ்கோ சென்ற திரு. மொரார்ஜி ஏற்கனவே திரு. பிரஷ்னேவுடன் முதலாவது சுற்றுப் பேச்சுக்களை முடித்துக்கொண்டார்.

மாஸ்கோவிலிருந்து உக்ரேயினுக்குச் சென்ற திரு. மொரார்ஜி இன்று காலை மாஸ்கோ திரும்பினார். (இ)

## எல்லாம் தனிச்சிங்களம்

பண்டத்தரிப்பு, செவ்.

தேசிய சேமிப்பு வங்கி இப்பகுதியிலுள்ள அதன் வாடிக்கையாளர்களுக்குத் தனிச் சிங்கள மொழியில் கடிதங்களை அனுப்பிவருவதாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் சமீபத்தில் தேசிய சேமிப்புவங்கி வெளியிட்டுள்ள வெளியீடுகள், விளம்பரங்கள் என்பனவும் சிங்கள மொழியில் மாத்திரமே இருக்கக் காணப்படுகின்றது. (அ)

# இந்திராவின் போக்கினால் காங்கிரஸ் பிளவுபடும்?

## 'இந்து' பத்திரிகை எச்சரிக்கை



புதுடில்லி, அக். 2

தென்னகத்திலிருந்துதான் காங்கிரஸ் தலைவர் வரவேண்டுமென்று வற்புறுத்தும் திருமதி இந்திராகாந்தியின் போக்கினால் இந்திரா காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபடும் அபாயம் தோன்றியுள்ளது என்று இந்து பத்திரிகை எச்சரித்துள்ளது.

இதுபற்றி 'இந்து' பத்திரிகை மேலும் கூறியுள்ளதாவது:

திருமதி காந்தி வடநாட்டுக்காரர் அரசியல் வேட்டையில் இறங்கியுள்ளபோது தென்னாட்டுக்காரரான கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்சை கட்சியின் தலைவராக்க முயல்வது கட்சிக்குள் பெரும் பிளவை ஏற்படுத்தவுள்ளது.

இது ஒருபுறமிருக்க முன்னைய தலைவர் திரு. பிரம்மானந்த ரெட்டியோடு திரு. தேவராஜ் அர்சை மோதவிட்டுள்ளார். இதனால் அவர் தனக்குப் பிடிக்காதவர்களை தூக்கியெறிவதில் முன்னணியில் நிற்கிறார்.

1969ல் காங்கிரஸில்பிளவை ஏற்படுத்துவதற்குமுன் இப்படியாகத்தான் திருமதி காந்தி மூத்த தலைவர்கள்மீது பழியைப் போட்டார். காங்கிரஸை ஒருமுறை இரண்டாகப் பிளந்தார், இன்னொருமுறை திரும்பவும் அதைச்செய்வது அவருக்கு சாதாரணகாரியமே. (கெ-இ)

# மதுபோதையில் கிணற்றுக்குப் பலி!

மாவிட்டபுரம், செவ்

மதுபோதையில் கிணற்றினுள் தவறிவீழ்ந்த நபர் ஒருவர் பிணமானார்.

மாவிட்டபுரம் மடத்தடியைச் சேர்ந்த நாகமுத்து மயில்வாகனம் [55 வயது] என்னும் சிகையலங்காரத் தொழிலாளியே இவ்வாறு திடீர் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

மாலை நேரம் தமது சிகையலங்கார நிலையத்தை மூடிவிட்டு வீடுதிரும்பிய காலமானவர் மதுபோதையில் காணப்பட்டதாகவும், சாப்பிடுவதற்கு முன் முகம்கழுவிக்கொண்டு வருவதாகக் கூறிக் கிணற்றுப் பக்கம் சென்ற அவர் கிணற்றுள் தவறிவீழ்ந்ததையடுத்து அயலவர்கள் கூடியபோதும் கிணற்றினுள் அதிகமாக நீர் நின்றதால் எவரும் இறங்க முன்வரவில்லையென்றும், பின்னர் சுழியோடிகளை அழைத்து வந்து தேடுதல் நடத்திய சமயம் அவரது பிணம் மீட்கப்பட்டதாகவும் இம்மரணம் குறித்து நடந்த மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறைப் பொலிசார் விசாரணைக்கான ஒழுங்குகளைச் செய்தனர். (அ)

## இந்திராவுக்கு கறுப்புக்கொடி

சென்னை, அக். 25

தமிழ்நாட்டிற்கு இம்மாத இறுதியில் விஜயம் செய்யும் முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கெதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நிகழ்த்துவதென திராவிட கழகம் தீர்மானித்துள்ளது.

மிசா கைதியாக இருந்து விடுதலையான திரு. வீரமணி தலைமையில் நிகழவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டம் திருமதி காந்தி தமது ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டிற்கும் தமிழ்மக்களுக்கும் இழைத்த அநீதிகளுக்கு கண்டனம் தெரிவித்தே நடாத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக மறைந்த ஈ. வே. ரா. பெரியாரின் மனைவி மணியம்மையார் ஒரு விரிவான அறிக்கையை வெளியிட்டுள்ளார். (கெ-இ)

# இந்திரா ஆதரவாளரே அவரைச் சிறையிலிடுமாறு வற்புறுத்தினராம்

புதுடில்லி, அக். 25

"இந்திராகாந்தியை சிறையில் தள்ளவேண்டுமென ஜனதா அரசை வலியுறுத்துபவர்கள் காங்கிரஸ்கட்சித்தலைவர் திரு. பிரமானந்தரெட்டி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் குழுவினரைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, இப்போது இந்திராவை ஆதரிப்பதாகச் சொல்லிக்கொள்ளுபவர்களும் அப்படி வலியுறுத்தியுள்ளனர். இவ்வாறு ஜனதா கட்சிப் பொதுச்செயலாளர் திரு. மதுலிமாயி தெரிவித்துள்ளார்.

இந்திராவின் ஆதரவாளர்களில் திரு. கமலாபதி திரிபாதியின் வீட்டில் கூடியவர்களில் பலர் என்னைச் சந்தித்து திருமதி இந்திராகாந்திமீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தியுள்ளனர் என்று திரு. மாயி கூறினார். (கெ-இ)

# ''வன்செயல் பலாத்காரத்தால் லட்சியத்தை அடைய முடியாது''

யாழ்ப்பாணம், புதன்

''வன்செயல்களாலும் பலாத்காரத்தாலும் நாம் நமது இலட்சியத்தை அடைந்துவிட முடியாது. அன்பும் அகிம்சையுமே உலகை ஆளத்தக்க கருவிகள். இவ்வாயுதங்கள் மூலமே காந்தியடிகள் இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார்.''

இவ்வாறு நல்லூர் மாணவர் பேரவையினரால், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு புத்தகங்கள் அன்பளிப்புச் செய்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட விழாவில் கலந்து கொண்டு புத்தகங்களை வழங்கிய எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. எஸ். தியாகராஜா கூறினார். இவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''நாடெங்கும் வன்செயல்களும் பலாத்காரமும் தலைவிரித்தாடுகின்ற இந்த வேளையில், இவற்றுக்கெல்லாம் காரணம் இளைஞர்கள்தான் என இளைஞர்கள்மீது மக்கள் அவநம்பிக்கை கொள்ளுமளவிற்கு அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ள இந்த வேளையில் நல்லூர் மாணவர் பேரவையினர் பொறுப்போடும், உணர்ச்சியோடும் செயற்பட்டு இத்தகையதொரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது போற்றுதற்குரியது.

இளைஞர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டைக் காத்து இத்தகையதொரு சேவையைப் புரிந்து முன்மாதிரியாகத் திகழ்வது இந்த நாட்டின் இளைஞர்களின் மத்தியிலும், தெரிந்தும் தெரியாமலும், பலாத்கார வன்செயல்களில் தங்களை ஈடுபடுத்தித் தமக்கும் சமூகத்திற்கும் கேடு விளைவிக்கின்றவர்களுக்கும் ஒரு பாடமாக அமையவேண்டும்.

எமது எந்த இலட்சியத்தையும் பலாத்காரத்தாலும், வன்செயல்களாலும் நிலைநாட்டவும் அதனை அடையவும் முடியாது. அன்பும் அகிம்சையுமே உலகை ஆளும் சக்திவாய்ந்தவை. எனவே இளைஞர்கள் அன்பையும் தூய்மையான சேவைமனப்பான்மையையும் கொண்டு ஒழுகி நமக்கும் நற்றமிழ் இனத்திற்கும் நற்பெயர் எடுக்கப் பாடுபடவேண்டும்.''

### விசேஷ ஆணையாளர் பேச்சு

யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. க. சிவஞானம் பேசுகையில் கூறியதாவது:-

''இளைஞர்களே நாட்டின் எதிர்காலத் தலைவர்கள். இவர்கள் மத்தியில் விரோதங்களுக்கும், விகார உணர்வுகளுக்கும் இடமிருக்கக்கூடாது. இன்று இங்கு மேற்கொள்ளப்படுகின்ற முயற்சி மாணவர்களது சிந்தனைக்கும் செயற்திறனுக்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இவ்வாறு இளைஞர்களால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவித ஆக்கபூர்வமான செயற் திட்டங்களுக்கும் நான் என்னுலான உதவிகளைச் செய்வதற்கு என்றும் எப்பொழுதும் ஆயத்தமாகவிருக்கின்றேன்.

இன்று மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற சமூகசேவையுடன் இலக்கியப் பணியையும் நீங்கள் ஆற்றவேண்டும். இது போன்ற நற்கருமங்களில் இன்னமும் இளைஞர்களைச் சேர்த்து எதிர்கால சந்ததியினர் நாட்டிற்கு நற்பணியாற்றவேண்டும், எந்தவித விரக்திக்கும் இடமளித்து, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடலாகாது. அத்தகைய தீய வழிகளில் செல்ல எத்தனிக்கும் இளைஞர்களைத் தடுத்து நல்ல பிரஜைகளாக்குவது நீங்கள் உங்கள் சமூகத்திற்கும் இனத்திற்கும் ஆற்றும் அளப்பரிய சேவையாகும்.''

திரு. கோவை மகேசன் பேசுகையில் ''இந்த நாட்டின் பன்னெடுங்காலமாக சகோதரத்துவத்துடனும் சமத்துவத்துடனும் வாழ்ந்துவந்த 'தமிழ்-சிங்கள இனங்களுக்கிடையே ஏற்பட்டுள்ள இன்றைய விளைவுகளுக்கும் அவற்றால் உயிரிழப்பதற்கும் அகதிகளாவதற்கும் காரணமானவர்களைச் சட்டப்படி தண்டிக்கவேண்டியது அரசின் தலையாய கடமையாகும்'' என்றார்.

நல்லூர் மாணவர் பேரவை ஆலோசகர் திரு. க. செல்வநாயகம் பேசுகையில் ''மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதுதான். ஆனால் அண்மையில் நடந்துமுடிந்த சம்பவங்கள் பற்றிச் சிந்திப்பதும் அதற்காகச் செயற்படுவதும் அரசியல் நடவடிக்கைகள் ஆகாது.

இதுபோன்றுபாதிக்கப்பட்ட மக்களுக்காற்றத்தக்க எந்தப் பணியிலும் மாணவர்களும், அரசியல்வாதிகளும் தான் ஈடுபட வேண்டும் என்றிராது அனைவரும் உணர்ந்து பாதிக்கப்பட்ட நமது உடன்பிறப்புகளுக்கு நம்மாலான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்'' என்றார்.

நல்லூர் மாணவர்பேரவைத் தலைவர் என். ரி. ஜெகன் பேசுகையில் ''நாம் மேற்கொண்டுள்ள இப்பணி இத்துடன்முடிவுறுது மேலும் மேலும் எம்மால் எந்தெந்தச் சேவைகளைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்வதற்கு ஆயத்தமாயுள்ளோம்'' என்றார். இவ்விழாவில் கவியரங்கம், பட்டிமன்றம், சங்கீதக் கச்சேரி ஆகியனவும் இடம் பெற்றன. (கா-அ)

## பண்ணிசைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் நடத்தப்பட்ட யாழ். மாவட்டத்தில் உள்ள மன்றங்களுக்கு இடையிலான பண்ணிசைப் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

மேற்பிரிவு: செல்வி சண்முகப்பிரியா நல்லையா (அகில இலங்கை சாந்தி சேவா சங்கம் உருத்திரபுரம்), செல்வி கே. ஸ்ரீமதி (நாவலர் பண்ணிசை மன்றம், சைவபரிபாலனசபை) செல்வி தர்மருணதேவி சிவப்பிரகாசம் (ஐயனார் சைவசமய அபிவிருத்திச் சங்கம் அராலி).

மத்திய பிரிவு: செல்வி பராசக்தி சிவலிங்கம் (ஆறுமுக நாவலர் சபை, நல்லூர்), செல்வன் அருள்மணிநாதன் சுப்பிரமணியம் (திருமுறை மன்றம் தெல்லிப்பழை), செல்வி வசந்தினி அம்பலவாணர் (ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம் கோப்பாய்).

கீழ்ப்பிரிவு: செல்வி சந்திரிகா கணேஸ்வரன் (இந்துசமய விருத்திச்சங்கம் மானிப்பாய்), செல்வி வசந்ததேவி நேசராசா (சரஸ்வதி மகாவித்தியாலயம் அராலி), செல்வி லோகேந்திரா செல்லத்துரை (அராலி தெற்கு சனசமூக நிலையம் வட்டுக்கோட்டை).

ஆரம்பபிரிவு: செல்வி ரஞ்சினிதேவி நேசராசா (செம்பியன் ஞானவைரவர் பஜனை மன்றம் அராலி), செல்வி விஜயகுமாரி மாணிக்கம் (சரஸ்வதி மகாவித்தியாலயம் அராலி), செல்வி சே. கலைவாணி (இந்து சமய அபிவிருத்திச் சங்கம் மானிப்பாய்).

35 மன்றங்கள் இப்போட்டியில் பங்குபற்றின.

### மனனப்போட்டி முடிவு

சுழிபுரம், செவ்

வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபையினரால் நடாத்தப்பெற்ற சகலகலா வல்லிமாலை மனனப் போட்டியில் பதினைந்து பேருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசு பெறுபவர்கள் விபரம் வருமாறு; இ. சுசிலாதேவி, சி. சிவஅருள், சி. சிவசக்தி, ந. பிரேமா, தி. திலகவதி, ச. வேந்தன், த. மோகனநாதன், த. ரவீந்திரன், இ. வனஜா, மா. ஜெயகௌரி, ஜெ. ஜெயக்குமார், ஜெ. விஜயா, தி. இவகௌரி, ஞா. மலர்விழி, மு. சிவன்னியா. (உ)

## ''உணர்ச்சியை விடுத்து உள்ளத் தூய்மையுடன் வாழ வேண்டும்''

யாழ்ப்பாணம், புதன்

''அறிவுவழிநின்றும் உணர்ச்சிவழிநின்றும் இன்றைய சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கிறது. பெரும்பாலானோருக்கு கோபமும் அகங்காரமும் நாட்பட மேலும் பழக்கப்பட்டுக் கொண்டே போகின்றது. அப்படியாக உணர்ச்சி மயமாக வாழாமல் உள்ளத் தூய்மையுடன் வாழ பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும் என சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகத்தில் நடைபெற்ற விஜயதசமி விழாவில் உரையாற்றிய திரு. மயிலை சிவசண்முகதாஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது ''சக்தி விழா கொண்டாடும் நாம் எமக்குள்ளே மறைமுகமாக ஒரு சக்தி இருப்பதை மறந்து விடுகின்றோம். இன்று அதிவுக்கண் கொண்டு பார்க்குமிடத்து பலதரப்பட்ட வகையினரிடையே ஒருவித அசமத்தப் போக்கு நிலவுவதைக் காண்கிறோம். இதனை நாம் சமுதாயத்திலிருந்து பின்னிப் பிணைந்து நீக்க வேண்டும். வேறுபலரும் உரையாற்றினர். (கெ-இ)

## ''விஜயதசமியன்று தொடங்கும் சகலதும் வெற்றியே''

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் பொற்பதியில் பரதநாட்டியஆசிரியை செல்வி ரேலங்கி செல்லையாவின் கலைக்கோவில் அபிநயகலா நாட்டியாலயத்தில் விஜயதசமி விழாவும் பரதநாட்டிய வித்தியாரம்பமும் சிறப்பாக நடைபெற்றன.

கலைமகள் ஆராதனையின் பின், பக்திப்பாடல்களும் நாட்டியாலய கீதங்களும், நாட்டியாலய மாணவிகளால் இசைக்கப்பட்டது.

இதையடுத்து சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த திரு. தா. சிவபாலசுந்தரம், பரதநாட்டியக் கலை சம்பந்தமாகவும் விஜயதசமி பெருமை பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அவர் பேசுகையில், நாடக, ஓவியக்கலை நிபுணர் திரு. கே. கே. வி. செல்லையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான செல்வி ரேலங்கி செல்லையாவின் கலைவளர்ச்சியை சிறுபராயத்திலிருந்தே நான் அவதானித்து வருவதாகவும், அவரது நாட்டியத் திறனை நோக்கும்போது இன்று அவர் நாட்டிய உலகின் கலாராணி என்று சொல்லுமளவுக்கு வளர்ச்சி அடைந்துவிட்டார் என்றும், வெற்றித் திருநாளான விஜயதசமியன்று தொடங்கும் எக்கருமமும் வெற்றியாகவே முடிவது திண்ணமாதலால் செல்வி ரேலங்கி செல்லையா அவர்களின் முயற்சியும் சிறந்த பலன் தருவது உறுதியானது என்றும் கூறினார்.

மேலும் கருவிலே திரு அமையப் பெற்ற ஆசிரியைகளிடம் கற்கும் சிறுர்கள் இலங்கையில் மருகிச் செல்லும் நாட்டியக்கலை புத்துயிர் பெறுவதற்கு பெரும் உதவியாக இருப்பார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

### கலைமகள்விழா

பண்டத்தரிப்பு, செவ்.

பண்டத்தரிப்பு பட்டண சபை அலுவலகத்தில் விசேட ஆணையாளர் திரு. ஏ. ஞானசேகரம் தலைமையில் விமரிசையாக கலைமகள் விழா நடைபெற்றது.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையம் ஆகியஇடங்களிலும் கலைமகள் விழா சிறப்பாக நடைபெற்றது.

### அனலைதீவில் வாணி விழா

யாழ்ப்பாணம், புதன்

''முதல் மூன்று நாளை துர்க்கைக்கும் அடுத்து மூன்றுநாளை இலக்குமிக்கும் மிகுதி மூன்று நாளை சரஸ்வதிக்கும் பூசை செய்கிறோம். இத்தேவிகளை வழிபடுவதன் மூலம் வீரம், செல்வம், கல்வி என்ற இஷ்ட சக்திகளைப் பெறலாம். பாடசாலைகளில் இவ்விழா நடத்தப்படவேண்டியது அவசியமாகும். ஒரு மனிதனுக்கு வீரம் செல்வம் கல்வி என்ற முப்பேறும் கிடைக்கவேண்டும். இவை ஒன்றும் இல்லையாயின் மனித வாழ்க்கை அர்த்தமற்றதாகிறது. ஒரு மாணவன் இவ்விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டியது மிக முக்கியமாகும்.

''தேவியின்விரதங்கள்உலகம் தோன்றிய காலம் தொட்டே இருக்கிறது எனலாம். இராமபிரான், பிரமாகூட இவ்விரதங்களை அநுஷ்டித்தனர்.''

இவ்வாறு அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கட்டிடக் கலைஞர் கலாநிதி சி. சபாநாதன் 'சக்தி' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். இவ்விழாவில், கல்லூரியில் நடைபெற்றுமுடிந்த பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி இசைப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவருக்கு சங்கீதபூஷணம் திருமதி சரோஜினி சபாநாதன் பரிசில்களை வழங்கினார்.

### வவுனியா மகாவித்தியாலயத்தில்

வவுனியா, செவ்.

வவுனியா மகாவித்தியாலயத்தில் கலைமகள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசிய மேற்படி மகாவித்தியாலய அதிபர் திரு. கா. லோகசிங்கம் மாணவர்கள் சமயப்பற்றுள்ளவர்களாகவும், உயர்ந்த நோக்கம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் மாணவர்களது நிகழ்ச்சியும், பாடசாலை ஆசிரியர் இ. சிவசோதியின் மெல்லிசைக் கச்சேரியும், பொன் புஷ்பரத்தினத்தின் இன்னிசைக் கச்சேரியும், உரும்பராய் கலைக்கோயில் நாட்டிய அக்கடமியின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

### திருமலையில் நவராத்திரி விழா

திருக்கோணமலை, செவ்

திருமலை நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பல்வேறு ஸ்தாபனங்களிலும் பாடசாலைகளிலும் கலைவாணிவிழா நடைபெற்றது. சிவயோக சமாசம், புனித சூசையப்பர் கல்லூரி, இந்துக்கல்லூரி, விக்னேஸ்வராக்கல்லூரி, செல்வநாயகபுரம் பிள்ளையார், அம்மன் கோவில் போன்ற இடங்களில் சமயச் சொற்பொழிவுகளும், சங்கீதக் கச்சேரிகள், நடனம், வில்லுப்பாட்டுப்போன்ற கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடந்தேறின.

பழம்பெரும் கலைகளின்

## மறுமலர்ச்சிக்கு நவராத்திரி முதலானவிழாக்கள் உதவும்

### நீதிபதி பாலகிட்ணர் உரை

யாழ்ப்பாணம், புதன்

'சரஸ்வதி பூஜை பிரதானமாக பெண்களுக்கு உரியதாகவே இருந்துவந்தது. காலப்போக்கில், ஆண்களும் ஒன்பது தினங்களும், விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். ஒன்பது தினங்களும் அவர்கள் முகச்சவரம்செய்யாது தாடிவளர்த்துள்ளதிலிருந்து இது தெரிகிறது.'

சாவகச்சேரி நீதிமன்ற மண்டபத்தில் நடந்த சரஸ்வதி பூஜை இறுதிநாள் நிகழ்ச்சியில் பேசிய சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் மேற்கண்டவாறு கூறினார்.

நீதிபதி திரு. பாலகிட்ணர் மேலும் கூறியதாவது: சட்டப் புத்தகங்களுடன் தொடர்புள்ள நீதிமன்றத்தில் சரஸ்வதி பூஜை கொண்டாடுவது இன்றியமையாதது. ஒன்பது நாட்களும், சச்சரவுகளுக்கு முடிவுகாணும் நீதிமன்றத்தில், அமைதியும், தெய்வீகமும் இடம்பெற்றதை அவதானித்தோம். புராதன கலைகளை திரும்பவும் மறுமலர்ச்சிசெய்து கொள்ளும்வகையில், இப்படியான விழா நாடெங்கும் கொண்டாடப்படவேண்டும்.

முதலியார் பொன் வேலாயுதபிள்ளை, பூஜைகளை முறைப்படிநடாத்திவைத்தார். இசைப்புலவர் சி. செல்லத்துரை நவராத்திரி தோத்திரங்களைப்பாடி மெருகூட்டினார். செல்வி தஷ்யந்தி பரராஜசிங்கம் புராணக் கதையை வில்லுப்பாட்டாகப் பாடினார். [க]

## மின்சாரத்திற்குப் பலி

பண்டத்தரிப்பு, செவ்.

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நீர்கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் பிரதம மருந்தாளராகக் கடமையாற்றுபவருமான திரு. எஸ். சிவலிங்கம் நீர்கொழும்பில் ஏற்பட்ட மின்சார விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்தார்.

நீர்கொழும்பிலுள்ள தமது வீட்டில் அவர் தங்கியிருந்த போது வீட்டின் மின் இணைப்பொன்றில் ஏற்பட்ட மின் ஒழுங்கினால் எதிர்பாராத விதமாகத் தாக்கப்பட்டு மரணமானதாகத் தெரியவருகின்றது. (அ)

## 'முதியோர் வழிகாட்ட வேண்டும்'

சுழிபுரம், செவ்

''இளையோருக்கு முதியவர்கள் வழிகாட்டியாகத் திகழ வேண்டும். ஆரம்பத்திலேயே இளையோர் உள்ளங்களில் சமயக் கருத்துக்களை, தேவார திருமுறைகளை பதியவைத்துக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அவர்களின் வருங்கால வாழ்வு வளமானதாக அமையும். மனத்தூய்மையும், உள்ளன்பும் பெற ஆலய வழிபாடு அவசியமானதாகும்.'' இவ்வாறு சமயப் பிரசாரகர் ஆசிரியர் கேனு நடராசா வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையார் நடாத்திய சகலகலாவல்லிமாலை மனனப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு நூல்களை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் இவ்வைபவம் நடைபெற்றது. பஜனைச்சபைச் செயலாளர் திரு க. வாமதேவன் நன்றியுரை கூறினர். (உ)

## மூன்றுண்டாகியும் தராதரப் பத்திரம் வழங்கவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன்

தனியார் துறையினரால் நடாத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியைகள் பயிற்சி நிறுவனம் மூன்று ஆண்டுகாலமாக பயிற்சி ஆசிரியைகளுக்கு தராதரப்பத்திரம் வழங்காமல் இருப்பதால் அந்நிறுவனத்திற்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக அப்பத்திரங்களை வழங்கவேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்று வட இலங்கை பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் செல்வி அ. இராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவருக்கும் ஏனைய தேசியப்பேரவை உறுப்பினருக்கும் பாலர் பாடசாலை ஆசிரியைகளின் நிலையை நன்கு விளக்கி, அரசாங்கம் வழங்கவிருக்கும் நியமனத்தில் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கு நியமனம்வழங்கவேண்டும் என வலியுறுத்த வேண்டுமென்ற இன்னொரு தீர்மானமும் நிறைவேறியது. (வெ-உ)

## இந்தியாவில் கூட்டுப்படிப்பு மேற்கொள்வார்



ஸ்ரீலங்கா பாடவிதான அபிவிருத்தி நிலயத்திற் கல்வியதிகாரியாகக் கடமையாற்றும் திரு. டபிள்யு. ஆர். அருணையா இந்தியா பயணமானார். இவர், அபிவிருத்திக்கான கல்வியில் புது மாற்றங்களை ஏற்படுத்தும் ஆசிய நிலயத்தால் கல்வியில் தொழிலனுபவத்தோடு சம்பந்தப்பட்ட நடைமுறையிலிருக்கும் முன்னேடித் திட்டங்கள்பற்றிய கூட்டுப் படிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக இவர் பங்களாதேஷ், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் செல்வார். (அ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்

மாத்தறை உயன்வத்த ஸ்ரேடியத்தில் நேற்று இழுக்கப்பட்ட 636-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:

**1-ம் பரிசு**
**14 S 0844**
ரூ. 100000/-

**2-ம் பரிசு**
**37 D 0465**
ரூ. 40000/-

**3-ம் பரிசு**
**21 L 0187**
ரூ. 10000/-

தலா 1700 ரூபா கொண்ட நூறு ஆறுதல் பரிசுபெறும் டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 42 A 0944 | 42 A 0990 |
| 60 A 0167 | 04 B 0845 |
| 05 B 0316 | 14 B 0653 |
| 19 B 0302 | 54 B 0141 |
| 54 B 0354 | 18 C 0835 |
| 23 C 0726 | 26 C 0508 |
| 30 C 0405 | 39 C 0057 |
| 19 D 0774 | 35 D 0667 |
| 38 D 0924 | 42 D 0459 |
| 47 D 0061 | 48 D 0410 |
| 53 D 0908 | 01 E 0524 |
| 14 E 0135 | 27 E 0469 |
| 43 E 0923 | 46 E 0994 |
| 54 E 0336 | 59 F 0823 |
| 63 E 0615 | 36 F 0170 |
| 14 F 0276 | 13 G 0882 |
| 23 G 0240 | 02 H 0626 |
| 26 H 0091 | 52 H 0743 |
| 32 J 0627 | 59 J 0179 |
| 05 K 0440 | 17 K 0195 |
| 17 K 0713 | 50 K 0586 |
| 60 K 0486 | 60 K 0951 |
| 02 L 0263 | 30 L 0570 |
| 41 L 0299 | 42 L 0301 |
| 52 L 0395 | 56 L 0129 |
| 06 M 0290 | 21 M 0948 |
| 34 M 0221 | 14 N 0545 |
| 22 N 0369 | 26 N 0472 |
| 48 N 0880 | 54 N 0621 |
| 16 O 0621 | 46 O 0121 |
| 47 O 0487 | 44 P 0100 |
| 48 P 0648 | 58 P 0165 |
| 12 Q 0419 | 62 Q 0249 |
| 07 R 0518 | 61 R 0268 |
| 45 R 0895 | 49 R 0876 |
| 55 R 0002 | 14 S 0779 |
| 19 S 0204 | 21 S 0359 |
| 41 S 0354 | 51 S 0140 |
| 03 T 0960 | 06 T 0219 |
| 10 T 0619 | 37 T 0250 |
| 54 T 0770 | 27 U 0625 |
| 02 U 0119 | 58 U 0843 |
| 34 V 0237 | 40 V 0569 |
| 09 W 0049 | 43 W 0542 |
| 09 X 0938 | 38 X 0297 |
| 61 X 0021 | 57 X 0667 |
| 03 Y 0024 | 38 Y 0103 |
| 42 Y 0023 | 49 Y 0937 |
| 48 Y 0929 | 15 Y 0142 |
| 11 Z 0497 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.)

இந்த வீட்டுவளவினுள்

## ஐந்தாவது தடவையாக பாய்ந்த வாகனம்

மாவிட்டபுரம், செவ்.

திடீரென வீட்டுவளவினுள் புகுந்த லொறி ஒன்றினுல் மோதப்படாமல் வீட்டுக்காரர் ஒருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்.

இச்சம்பவம் தெல்லிப்பழையில் நடைபெற்றது

தெல்லிப்பழையைச் சேர்ந்த எம். எஸ். சிதம்பரப்பிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து கலவர நேரத்தில் தப்பிப் பிழைத்து சொந்த ஊருக்கு வந்து தெல்லிப்பழையில் வசித்துவந்தார். சம்பவதினம் அதிகாலை நேரம் இவர் தமது வீட்டு வளவுக் கதவினைத் திறக்கச் சென்ற சமயம் திடீரென வீதியால் வந்த லொறியொன்று விபத்திற்குள்ளாகி இவரது வீட்டு வளவினுள் புகுந்ததாம்.

தெய்வாதீனமாக இவர் உயிர் தப்பினுர். ஆனுல் இவரது வீட்டு வாசலுடன் நின்ற மின்கம்பம் பலத்த சேதத்திற்குள்ளாகி மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டதுடன் வீட்டு வளவின் 'கேற்' பலத்த சேதமடைந்தது.

இவ்விபத்துக் குறித்து சுன்னுகம் பொலீசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர்.

இதற்கு முன்னரும் நான்கு தடவை இவ்விடத்தில் வாகனங்கள் விபத்திற்குள்ளாகி இவரது வீட்டு வளவினுள் புகுந்ததாகவும், இந்த லொறி ஐந்தாவது தடவையாக விபத்திற்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறும் இவ்விடத்தில் உள்ள வளைவில் இனிமேலும் விபத்துகள் ஏற்படாவண்ணம் அறிவிப்புப் பலகைகளை நாட்டி இவ்வளைவில் வாகனங்கள் குறைந்த வேகத்தில் செல்ல வழிவகுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது. (உ)

## "தமிழர் பொருளாதார இயக்கம் புத்துயிர் பெறும்"

மாவிட்டபுரம், செவ்.

தமிழ்ப்பகுதிகளை பொருளாதாரத்துறையில் விருத்தியடையச்செய்து தமிழ் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேலை வாய்ப்புகளை அளிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்டு கடந்த ஓராண்டுக்கு மேலாக இயங்காதிருந்துவந்த தமிழர் பொருளாதார இயக்கத்திற்கு மீண்டும் புத்துயிர் கொடுத்துப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்று திரும்பியுள்ள மேற்படி இயக்கச் செயலாளரும் ஸ்தாபகர்களில் ஒருவருமான சட்டத்தரணி அ. குமரகுரு இதுகுறித்து தீவிர நடவடிக்கை எடுத்துள்ளார்.

தமிழர் பொருளாதார இயக்கத்தை முன்னர் போன்று சிறப்பாகதொடர்ந்தும் இயக்க அவர் முற்பட்டுள்ளார்.

அவர் இதுகுறித்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளதாவது:

தமிழர் பொருளாதார இயக்கம்-ஒரு அரசியல் கலப்பற்ற இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டதால் அரசியல் தலைவர்களது உதவியின்றி அதிகம் வளர்ச்சியடைய முடியவில்லை. ஆதலால் இவ்வியக்கத்தை புனரமைப்புச் செய்து தமிழ்ப் பகுதிகளை பொருளாதாரத் துறையில் உயர்த்துவதற்கு இனிமேல் அரசியல் தலைவர்களதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் உதவி இன்றியமையாதது.

சிலகாலம் இவ்வியக்கம் மந்தநிலையிலிருந்தபோதும் தற்போது மீண்டும் இயங்க உள்ளது. அண்மையில் கலவரங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட வேலையிழந்தவர்கள் இவ்வியக்கத்தில் ஈடுபடுத்தப்படுவதுடன் பெரிய அளவில் பாற்பண்ணைகள் கோழிப்பண்ணைகள் விவசாயப் பண்ணைகள் சிறுகைத்தொழில்கள் ஆகியன ஆரம்பிக்கவும் அரசநிலங்களைப்பெற்று காடுவெட்டி மக்களை குடியேற்றவும் வெளிநாடுகளில் குறிப்பாக இலண்டனிலிருந்து தனிநபர்களது உதவிகள் பெற்று இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக தொழில் துறைகளை ஆரம்பிக்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்தில் சாதாரண உறுப்பினர்கள் 25000 பேரும் இயக்கும் உறுப்பினர்கள் 250 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் இயக்க நடவடிக்கைகளை கவனிப்பதற்காக பல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவார்கள். (உ)

## தீவுப்பகுதி விவசாயிகள் கவலை

வேலணை, செவ்.

சில நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் பெரும் மழையினுல் தீவுப்பகுதியில் உள்ள விவசாயிகள் விதைத்திருந்த நெல் விதைகள், நெற்பயிர்கள், நாற்று மேடைகள் என்பன அழிந்துபோகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

பலவித இன்னலுக்கிடையில் அதிக விலை கொடுத்து வாங்கி விதைத்த நெற்பயிர்கள் யாவும், வெள்ளம் வயல்களில் தேங்கி நின்றுகொண்டிருப்பதினுல் அழுகி அழிந்துவிடுமோ என விவசாயிகள் கவலைப்படுகின்றனர். (உ)

## 'இறைபக்தியின் அவசியம்'

மட்டுவில், செவ்.

''எமது இளம் சந்ததியினர் என்றென்றும் சமாதானமும், உயர்ந்த இலட்சியமும் கொண்ட சந்ததியினராக வளர்க்கப்படவேண்டும். இதற்கு நாம் அவர்களுக்கு இளமையிலிருந்தே ஆத்மீக சக்தியை ஊட்டி வளர்க்கவேண்டும். அதற்கு ஆலய தரிசனம், இறைவனின் நாம பஜனைகள் சிறந்த வழியாகும்.'' இவ்வாறு விளைவேலி மருதடி விரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சமய வைபவம் ஒன்றில் ஆலய கூட்டுப்பிரார்த்தனைச் சபையை புனரமைப்புச் செய்துவைத்து உரை நிகழ்த்திய திரு. என். ஞானகுண விரசிங்கம் கூறினர்.

திரு. அருள் வேலழகன் தலைமை தாங்கினர். (உ)

## கரபந்தாட்டம்

பண்டத்தரிப்பு, செவ்.

அளவெட்டி இளைஞர் விளையாட்டுக்கழகத்திற்கும் பெரியவிளான் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்திற்கு மிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டப் போட்டியில் அளவெட்டி இளைஞர் விளையாட்டுக் கழகம் 3-2 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டி பெரியவிளான் வடசேரிப்பிள்ளையார் ஆலய முன்றலிலுள்ள விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (அ)


நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 2-30 7-00
ஜெய்சங்கர் - சாவித்திரி
தாய்க்கு ஒரு பிள்ளை

RIO (Jaffna)
Daily 4 Shows
GOD FORGIVES I DON'T

ராஜா 3-வது வெற்றிவாரம்
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) ஜெமினி - ஜெயசித்ரா (நடித்த)
தசாவதாரம் (கலர்)

மனோஹரா எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் புவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
SECRET FOREST OF AFRICA
(Scope Color)

A Grand Release!
சாந்தி தினசரி 10-30, 2 30, 4-45, 7-00, 9-30
யாழ். நகர் 'FIVE CRAZY BOYS'
போன்; 7642 (Color)

வின்ஸர் தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ காலை 9-30 மணிக்கு காட்சி ஆரம்பமாகும் காட்சிகள் தொடர்ந்து காண்பிக்கப்படும்.
(யாழ். நகர்) போன்; 7693
எம். ஜி. ஆர். — லதா நடித்த
நீதிக்கு தலைவணங்கு


## போயாதினத்தை முன்னிட்டு இன்று சினிமாக் காட்சிகள் இல்லை

### மணிவாக்கு

எவ்வாறு ஒரு மனிதன் தன்னால் கண்டுகொள்ள முடியாத தன்முதுகைப் பிறர் காண்பாரோ, அதே போல் எங்களால் எங்களுடைய பிழைகளைக்காண முடியாது.

—காந்திமகான்


# ஈழநாடு

The Eelanaadu


## செலாவணிக் கட்டுப்பாடு!

வெளிநாடு செல்பவர்களுக்கு இப்போது விதிக்கப்பட்டுள்ள செலாவணிக்கட்டுப்பாடு தளர்த்தப்படவிருப்பதாகவும் அடுத்த மாத நடுப்பகுதியில் நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல் தமது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் போது இது பற்றி அறிவிப்பாரென்றுஎதிர்பார்க்கப்படுவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது.

செலாவணிக்கட்டுப்பாடு முற்றாக நீக்கப்பட முடியாவிட்டாலும் ஓரளவாவது தளர்த்தப்படுவது வரவேற்கவேண்டியது.

செலாவணிக் கட்டுப்பாட்டினால் பெரும் ஊழல்களும், மோசடிகளும் நடைபெற்றிருக்கின்றன என்பதும் இவற்றில் பெரும் புள்ளிகளும் வசதி படைத்தவர்களுமே ஈடுபட்டிருந்தனரென்பதும் செலாவணி மோசடி சம்பந்தமான வழக்கு விசாரணைகளிலிருந்து வெளிப்பட்டது.

செலாவணிக் கட்டுப்பாட்டினால் ஒரு சிலர் நன்றாகச் சம்பாதித்தனரென்பதுநாடறிந்த விஷயம்.

இங்கிருந்து இந்தியா செல்பவர்கள் இங்கு இரண்டாயிரம் கொடுத்து இந்தியா சென்று ஆயிரம் ரூபாய் பெற்றுவந்ததும் உண்டு. இப்படி நூற்றுக்கு நூறு வீதம் கமிஷன் பெற்ற கதைகள் இந்தியா செல்பவர்கள் விஷயத்தில் மட்டுமல்ல வெளிநாடுகளுக்குப் படிப்பதற்காகவும் வேலை வாய்ப்புப் பெறுவதற்காகவும் சென்றவர்கள் விஷயத்திலும் நடைபெற்றுள்ளன.

செலாவணிக் கட்டுப்பாட்டை முற்றாக நீக்கிவிடுவதன் மூலம் கமிஷன் பெறும் தரகர்களுக்கு முற்றுப் புள்ளிவைக்கலாம். பிரயாணக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தும்போது செலாவணிக்கட்டுப்பாடு தளர்த்தப்படுவது அவசியம்.

இதேபோல்கைத்தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருள்களின் இறக்குமதிக்கும் கைத்தொழில் உற்பத்திக்கான இயந்திர உபகரணங்களை இறக்குமதி செய்வதிலுள்ள கட்டுப்பாடுகளையும் நீக்குவது பற்றியும் அரசாங்கம் அறிவிக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

நமது நாட்டில் மூலப்பொருள்களுக்கும் உழைப்புச் சக்திக்கும் குறைவில்லை. இவற்றை இதுவரை நாம் சரியாகப்பயன்படுத்தவில்லை.

நமது நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்களைத் தக்கவகையில் பயன்படுத்துவதற்கு முதலில் நடவடிக்கை எடுக்கவேண்டும். நமது நாட்டில் உற்பத்திலாம். செய்யக்கூடிய இயந்திர உபகரணங்களையும் நாம் பயன்படுத்துவதற்கும் இத்தகைய இயந்திர உபகரணங்களை நமது நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கவேண்டியதும் அவசியமாகும்.

இதன் பின்னரே மூலப் பொருள்களையும் இயந்திர உபகரணங்களையும் இறக்குமதிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பது விவேகமான செயலாக அமையுமென்று சொல்லலாம்.

## காங்கேசன் கிராமங்களுக்கு பரவலான நிதிஒதுக்கீடு

### 'அமிர்'நடவடிக்கை

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள கிராமங்கள் சகலவற்றுக்கும் பரவலானமுறையில் நிதி ஒதுக்கீடுகள் செய்து அவற்றை அபிவிருத்தி செய்வதற்காக கிராம அபிவிருத்தி வேலைகள் குறித்த புள்ளி விபரங்களை காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு அ அமிர்தலிங்கம் திரட்டிவிருகிறார்.

ஒவ்வொரு கிராமத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய வீடமைப்புத் திட்டங்கள், வீதிகள், பொதுக்கிணறுகள், நீர் விநியோகத்திட்டங்கள், பாலங்கள் போன்ற பல்வேறு விபரங்களும் திரட்டப்படவுள்ளன.

இவற்றை கிராம முன்னேற்றச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ள திரு. அமிர்தலிங்கம் முடிவுசெய்துள்ளார்.

கடந்த காலங்களில் சில கிராமக்களுக்குக் கூடுதலாகவும், சிலவற்றுக்கு குன்றவாகவும் பாகுபாடான முறைகளில் நிதி ஒதுக்கீடுகள் நடத்ததால் பல கிராமங்கள் அபிவிருத்தி யடையமுடியாதநிலை இருந்து வந்ததாக தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்தே இவ்விபரங்களை அவர் திரட்ட முன்வந்துள்ளார்.

தற்போது காங்கேசன் துறைத்தொகுதிக்கென உள்ளூராட்சிஅமைச்சு ஒதுக்கிய 2லட்சம் ரூபாவில் சில அத்தியாவசிய வேலைகளை மேற்கொள்ள சிபார்சு செய்யப்பட்டுள்ளதுடன் இனிமேல் ஒதுக்கப்படும் நிதியில் சகல கிராமங்களும் பயன்பெறும்வகையில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்காக இப்புள்ளி விபரங்கள் திரட்டப்படுகிறது'. (உ)

## சட்டத்தரணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வியையும் பின்னர் பொது மக்கள் காப்பாற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் இக்கார் சுன்னாகம் பகுதியிலுள்ள அராக்கலை என்னும் இடத்தில் அநாதரவாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கார் கடத்தல் பற்றி பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். இதுவரை சந்தேகநபர் எவரும் கைது செய்யப்படவில்லை. (கா-க)

## முகமூடி இளைஞர்கள் கைவரிசை

மாத்தளை, செவ்வாய்

முகமூடி அணிந்த பத்து இளைஞர்கள் துப்பாக்கி முனையில், 3000 ரூபாவையும் துப்பாக்கியொன்றையும் கொள்ளையடித்துள்ள சம்பவம் லக்கல என்ற இடத்தில் நடந்துள்ளது.

ரி.பி.கபிலரத்தின என்பவரின் வீட்டிற்குச் சென்ற இக்கோஷ்டியினர் துப்பாக்கி முனையில், அவரை எச்சரித்த பின் கொள்ளையடித்ததாக இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## உயர்பதவியில் ராஜா

கொழும்பு, செவ்வாய்

இலங்கையின் முன்னாள் உலகம்சுற்றும் தூதுவராக இருந்தவரான திரு. ராஜா குமாரசாமி பிரதம மந்திரியினதும் மந்திரி சபையினதும் சர்வதேச விவகார பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார முக சபைகளின் பல்வேறு உயர்பதவி வகித்த திரு குமாரசாமி அண்மையிலேயே ஓய்வுபெற்று நாடுதிரும்பினர்.

ஐ நா. உதவிப் பொதுக் காரியதரிசியாகவும் இவர்பதவி வகுத்துள்ளார். (இ)

#### கொடிகாமத்தில்

## பெருமழையினல் கடைகள் இடிந்து தரைமட்டம்!

யாழ்ப்பாணம், புதன்

கொடிகாமம் சந்திக்கு அருகில் உள்ள மூன்று கடைகள் தொடர்ந்து பெய்த பலத்த மழையினல் இடிந்து விழுந்து தரைமட்டமாகின. கடைக்குள்ளிலிருந்த தளவாடங்கள் பலத்த சேதமடைந்தன.

சுமார் நூறு வருடங்கள் பழமை வாய்ந்த இக்கட்டிடம், நேற்று முன்திணம் காலை 11 மணியளவில் இடிந்துவிழும் சமயம், கடையிலிருந்தவர்கள் வெளியில் பாய்ந்து ஓடிவிட்டார்கள்.

ரயில்பாதைக்கு அருகில் உள்ள இக்கடைகள் ரயில் ஒன்று அப்பகுதியால் சென்று கொண்டிருந்த சமயமே இடிந்து விழுந்ததாகக்கூறப்படுகிறது.

இக்கடைகளுடன் சேர்ந்த மற்றும் 3 கடைகளும் ஆபத்தான நிலையில் இருப்பதாக அஞ்சப்படுகிறது. க-அ)

#### கொழும்பு கல்வி பணிப்பாளர்

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை இன்றும் சந்திப்பார்

யாழ்ப்பாணம், புதன்

பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் குறைகளை, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள கல்விப் பணிப்பாளரும் மற்றும் அதிகாரிகளும் யாழ். கல்வித் திணைக்களக் காரியாலயத்தில் வைத்துத் தனித்தனியாக விசாரித்தனர்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் குறைகளை நேரில் கேட்டறிந்து மேல்நடவடிக்கை எடுக்குமுகமாக கொழும்பு கல்வித் திணைக்களப் பணிப்பாளர் திரு. புஞ்சி நிலமை யாழ்ப்பாணம் வந்துள்ளார். பணிப்பாளருடன் மற்றும் அதிகாரிகளும் வந்துள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ். கிளை அதன் தலைவர் திரு. எஸ் கே. சுந்தரலிங்கம் தலைமையில் பணிப்பாளர் திரு. புஞ்சி நிலமையையும் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர் கொழும்பு அதிகாரிகளின் வருகை பல ஆசிரியர்களுக்கும் தெரிந்திருக்காததால் அவர்கள் வருகை தர முடியாது போனதாகத் தலைவர் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து இன்று போயா தினத்திலும் யாழ். கல்விக் கந்தோரில், இன்று வரும் ஆசிரியர்களைச் சந்தித்து அவர்கள் குறைகளைக் கேட்டறிந்து கொள்வதாகப் பணிப்பாளர் உறுதியளித்தார்.

இது சம்பந்தமாகச் சங்கச் செயலாளர் திரு.த.தேவராசா விடுத்துள்ள அறிக்கையில் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இன்று சங்கப்பணி மனையில் தம்மைச் சந்திக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

#### வவனிக்குளம் சம்பவம்:

## கைதான மற்றும் மூவர் ரூ.500பிணையில் சென்றனர்

மன்னர், புதன்

வவனிக்குளம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று சந்தேகநபர்களை விசேஷ பொலிஸ் குழுவினர் மன்னர் மாவட்ட நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்தனர்.

நாட்டில் கலவரம் நடந்த சமயம் வவனிக்குளத்தில் நடந்த இச்சம்பவத்தின்போது 4 பேரும் ஒரு கான்ஸ்டபிளும் துப்பாக்கியினல் சுட்டுக் கொலைசெய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைதான 8 சந்தேக நபர்கள் நீதிபதிமுன் ஆஜர்செய்யப்பட்டபின் சாட்சியமில்லாத காரணத்தினுல் விடுதலைசெய்யப்பட்டனர்,

பின்னர் கைதான மூன்று சந்தேக நபர்களை அடையாளம் காட்ட சாட்சிகள் இல்லாதபடியால், நீதிபதி சந்தேக நபர்களை தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து அறிவித்தல் கிடைக்கும்போது, நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். [க-அ]

## அரசு ஊழியர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாக வழங்கிய 1000 ஏக்கர் நிலத்தை பிரித்து தரும்படி கூட்டணி எம். பிக்கள் விடுத்த கோரிக்கை குறித்துநாளை முடிவு சொல்வதாக கூறினர். (ம)

## துப்பாக்கி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரும் அப்புதிய காரில் ஏறிச் சென்றுவிட்டனராம்.

### பொலிஸார் விசாரணை

சுன்னாகம் பொலிஸார் உடன் சென்று விசாரணை நடத்தினர். கிராமிய வங்கியின் முன்பக்கத்தில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. சப்-இன்ஸ்பெக்டர் பெரேரா, கான்ஸ்டபிள் தா. சிவபாதசுந்தரம் ஆகியோர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கா-க)

## உடுவில் கொலைவழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

சுதுமலை கொலை வழக்கு, நேற்று யாழ்.மேல் நீதிமன்றத்தில், நீதிபதி ஜனப்.எம்.எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு. அடுத்த வருடம் ஜனவரி 9ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது

இவ்வழக்கில் சுதுமலையில் இவ்வருடம் ஜனவரிமாதம் 13ம் தேதி அ.மயில்வாகனம், க. பொன்னுச்சாமி, பொ. இராசரத்தினம். அ. குமாரவேலு ஆகியோர்,லட்சுமணன் கிருஷ்ணசாமி என்பவரைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில், சட்டத்தரணி வி.என். நவரத்தினம், சட்டத்தரணி த.சோமசுந்தரத்தின் உதவியுடன் ஆஜரானர். எதிரிகளுக்காக அரசினல் சட்டத்தரணி எஸ். சுரேஸ்குமார் நியமிக்கப்பட்டிருந்தார். அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் ஆஜரானர். (க-அ)

## நேற்று நடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எவரையும் அடையாளம் காட்டவில்லை.

மானிப்பாய் வங்கியில் 28,045 ரூபா கொள்ளை நடைபெற்றது தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில் 5 சாட்சிகள் சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை.

அராலியில் திருமதி ரங்கநாதன் வீட்டில், துப்பாக்கிமுனையில் துவக்குக் கொள்ளையடித்தது தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில், சாட்சிகளான திருமதி ரங்கநாதனும், செல்வி வசந்தா ரங்கநாதனும் சந்தேகநபரை அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன், சட்டத்தரணி ரி. சோமசுந்தரம் ஆகியோர் ஆஜரானர்கள்.

நேற்று மொத்தம் ஆறு அடையாள அணிவகுப்புகள் நடைபெற்றன. (க)

## 48 வயது நபர் கொலை! ஒருவரை பொலிஸ்தேடுகிறது

ஏருவூர், செவ்

ஏருவூரில் நடைபெற்ற வாக்குவாதத்தை அடுத்து 48 வயதான நபரொருவர் கத்திக் குத்துக்குப் பலியானர்.

சின்னத்தம்பி நல்லரத்தினம் என்பவரேகத்திக்குத்துக்காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானர்

இவருடையமகன் கத்திக்குத்துக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நல்லரத்தினத்திற்கும் விநாயகமூர்த்தி கனகையா என்பவருக்கு கிடையே வாக்குவாதம் எழுந்ததாகவும் அதையடுத்து கனகையா நல்லரத்தினத்தின் மீது கத்தியால் குத்தினர் என்றும் அப்போது காலஞ்சென்றவரின் மகன் அங்கே வர அவருக்கும் கனகையா கத்தியால் குத்தினர் என்றும் பொலிஸ் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

பொலிசார் சந்தேகத்தின் பேரில் விநாயகமூர்த்தி கனகையாவைத் தேடிவருகின்றனர். (இ)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka;